# வாக்குமூலம்

## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.

**தேதி: 16.06.2026**

**OS. No.36/2016**

**வழக்கு சாட்சி DW.4– சையது அபுதாகீர் , த/பெ.ஷாகுல் ஹமீது**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் டீக்கடை நடித்தி வரும் இடம் வேலுச்சாமிக்கு பாத்தியப்பட்ட இடம் என்றால் சரிதான் . நான் டீக்கடை நடத்தி வந்த இடம் தற்போதுவரை பட்டா , கிரையப்பத்திரம் ஆகியவை வேலுச்சாமி பெயரில் தான் உள்ளது என்றால் அதுகுறித்து எனக்குத் தெரியாது . மோகினிக்கு வழக்குச் சொத்தை உள் வாடகைக்கு விட அதிகாரம் வழங்கியிருந்தாரா என்றால் இல்லை, என் பணத்தேவைக்காக நான் உள்வாடகைக்கு விட்டேன் . நிரூபண வாக்குமூலத்தில் நான் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல . அசல் வழக்கு எண்.46/2015 என்ற வழக்கு வேலுச்சாமிக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றால் தடையுறுத்து பரிகாரம் கோரி தாக்கல் செய்தேன். அந்த வழக்கான அசல் வழக்கு எண் .46/2015 ஐ நான் மேல்நடத்தாமல் வழக்கை திரும்ப பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். வேலுச்சாமியிடம் நான் கொடுத்த ரூ.1,05,000/– திரும்ப பெற்றுக்கொண்டு தான் நான் வேலுச்சாமிக்கு எதிராக தாக்கல் செய்த அசல் வழக்கு 46/2015 ஐ திரும்ப பெற்றுக்கொண்டேன் என்றால் மோகினியிடம் நான் ரூ.1,05,000/– ஐ பெற்றுக்கொண்ட காரணத்தால் வழக்கை நடத்தவில்லை, வழக்கு என்ன ஆனதென்று எனக்குத் தெரியாது.

நான் 1, 2 ம் பிரதிவாதிகளுக்கு ஆதரவாகவும் , வாதிக்கு எதிராகவும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி தான் தாவா சொத்தில் சுவாதீனத்தில் இருப்பதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து காலியிடமாக வாதி வேலுச்சாமியிடம் தான் சுவாதீனத்தில் உள்ளது என்றால் காலியிடமாக உள்ளது , ஆனால் சுவாதீனம் யார் வசம் உள்ளது என்று தெரியாது . வேலுச்சாமி ஒத்தித் தொகையான ரூ .1,05,000/- ஐ என் வசம் கொடுத்ததை நான் பெற்றுக்கொண்டு மோகினியிடம் இருந்து ஒத்தித் தொகையை பெற்றதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . வேலுச்சாமி உரிமையும் , உடைமையும் உள்ள இடத்தை நான் மோகினிக்கு உள் வாடகைக்கு விட்டது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல . நான் டீக்கடை நடத்தி வந்த இடத்தின் சர்வே எண் விபரம் எனக்குத் தெரியாது.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.06.16 13:08:46 +0530

District Munsif cum Judicial Magistate No.I,
Kodaikanal.